# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2105/22 - 2019 ජනවාරි මස 09 වැනි බදාදා - 2019.01.09

*2105/22 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட (திருத்தப்பட்ட) 2008 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் திருத்த மீளாய்வு அங்கீகாரம் தொடர்பான அறிவித்தல்**

(திருத்தப்பட்ட) 2008 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்துடன் சேர்த்துக் கொள்வதற்காக முன்மொழியப்பட்ட திருத்த மீளாய்வு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது என 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(ஊ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பயனால் மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(எ) ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8ஏ ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனால் (1999 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒரு திருத்தமாக இருக்கின்ற) (திருத்தப்பட்ட) 2008 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 7.30 ஆம் பிரிவுக்கான ஏற்புடைய திருத்தத்தை இத்தால் நான் அங்கீகரிக்கின்றேன்.

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்), 7.30 ஆம் பிரிவின் திருத்தம்.

1. (கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 இற்கான ஒரு திருத்தமாக இருக்கின்ற) கொழும்பு அபிவிருத்தித் திட்டத்தின் திருத்தம் 2008 ஆம் ஆண்டின் 7.30 ஆம் பிரிவு பின்வருமாறு மூன்றாம் பந்திக்குப் பின்னர் உடனடுத்து வரக்கூடிய ஒரு புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

> "மொத்த மாடிகளின் எண்ணிக்கை மற்றும் ஏனைய ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் என்பவற்றைக் கருத்தில் கொள்ளாமல் ஆகக் கூடுதலாக ஒரு மேலதிக வாகனத் தரிப்பிட மாடி மற்றும் அத்தகைய அபிவிருத்திகளுக்காக ஒரு இடைமாடிக்கும் விசேட முதன்மை குடியிருப்பு வலயத்தில் அபிவிருத்திகள் அனுமதிக்கப்படுகின்றன".

பாட்டலீ சம்பிக்க ரணவக்க,
மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

2017, யூலை 14.

**கவனத்தில் கொள்ள வேண்டியது** : இந்த ஒழுங்குவிதிகள் 2017, யூலை மாதம் 14 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

01-557